# திறவுகோல்



*2056 / மார்கழி / மாத இதழ்*

---

**வெளியீடு:**
**மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.**

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# தமிழ் திரைப்படங்களில் பாரதியாரின் பாடல் வரிகள்

*கலையின் வழியே மக்களின் பொழுதுபோக்கு நிறைவேறும் அதே நேரம் நாட்டின் இயல்பையும் நாட்டுநடப்பையும் அறிந்துகொள்ளவும் வழிகிடைக்கிறது. அறம் ஒழுக்கம் சார்ந்த சிந்தனைகளும் பொதுநலம் சார்ந்த செயல்பாடுகளும் மக்களுக்கு உணர்த்திடவும் கலைகள் பேருதவி புரிகின்றன.*

*திரைப்படம் என்பது மக்களின் மனதில் வெகுவிரைவில் நுழைந்து விடக்கூடிய பாரத்தை நிகழ்த்திவிடுகிறது. இசையும் பாடல்களும் மக்களின் மனதில் அமைதியையும் சாந்தியையும் ஏற்படுத்தி ஆற்றுப்படுத்தி விடுகிறது. அத்தகு பாடல்களில் மகாகவி சுப்பிரமணிய பாரதியின் பாடல்கள் பலவற்றை தமிழ்த் திரைப்படங்களில் வெகு நேர்த்தியாக பயன்படுத்தி இருக்கிறார்கள்.. பாரதியின் வரிகள் வசனங்களாகியுள்ளன. சிவாஜியின் கைகொடுத்த தெய்வம், கப்பலோட்டிய தமிழன் போன்ற படங்களில் பாரதியின் பாடல்கள் இடம்பெற்றன. அந்த காலகட்டத்தில் பல படங்களில் பாரதியின் வரிகள் பயன்படுத்தப்பட்டன. அப்போது மட்டுமல்ல இப்போதும் எப்போதும் வீச்சுடனும் வலிமையுடனும் இளமையுடனும் இருக்கக் கூடிய ஆயிரக்கணக்கான வரிகளை பாரதி எழுதியுள்ளார்.*

*கவிதை மற்றும் உரைநடையில் தன்னிகரற்ற புலமை பெற்ற இவர், தம் எழுத்துக்களின் வாயிலாக மக்களின் மனதில் விடுதலை உணர்வை விதைத்தவர். தமிழ், தமிழர் நலன், இந்திய விடுதலை, பெண் விடுதலை, சாதி மறுப்பு மற்றும் பல்வேறு சமயங்கள் குறித்து கவிதைகளும் கட்டுரைகளும் எழுதியுள்ளார். இவருடைய கவித்திறனை மெச்சி பாரதி என்ற பட்டம் எட்டயபுரம் அரச சபையால் வழங்கப்பட்டது.*

*பெருங்கோபக்காரனான பாரதி, பேரன்பும் கொண்டவன். 'கண்ணம்மா' என்ற வார்த்தையை இத்தனை காதல் நிறைந்த வார்த்தையாக்கியது பாரதிதான். தமிழ் சினிமாவில் 'கண்ணம்மா' என்ற வார்த்தையைக் கொண்ட பாடல்கள் பல. இறை உணர்வு, தேச உணர்வு, விடுதலை வேட்கை, சமூக எழுச்சி, காதல் என பல சூழல்களில் தமிழ்த் திரைப்படங்களில் இடம்பெற்ற பாரதியின் பாடல்கள் பட்டியல் இங்கே தொகுக்கப்பட்டுள்ளது.*

*மேனகா 1935*
*அதிர்ஷ்டம் 1939*
*உத்தமபுத்திரன் 1940*

*நாம் இருவர் 1947*
*வேதாள உலகம் 1948*
*சக்ரதாரி 1948*
*வாழ்க்கை 1949*
*ஏழை படும் பாடு 1950*
*மணமகன் 1951*
*ஓர் இரவு 1951*
*அம்மா 1952*
*அந்தமான் கைதி 1952*
*பராசக்தி 1952*
*தாய் உள்ளம் 1952*
*நாம் 1953*
*பெண் 1953*
*தெருப்பாடகன் 1954*
*கூண்டுக்கிளி 1954*
*விளையாட்டு பொம்மை 1954*
*கள்வனின் காதலி 1955*
*நல்ல தங்கை 1955*
*குலதெய்வம் 1956*
*ரங்கோன் ராதா 1957*
*ராஜராஜன் 1957*
*சக்கரவர்த்தி திருமகன் 1957*
*புது வாழ்வு 1957*
*புதையல் 1957*
*திருமணம் 1958*
*பானை பிடித்தவள்பாக்கியசாலி 1958*
*ஓடி விளையாடு பாப்பா 1959*
*அவர் யார் 1959*
*பிரசிடெண்ட் பஞ்சாட்சரம் 1959*
*நாலு வேலி நிலம் 1959*
*ஆட வந்த தெய்வம் 1960*
*படிக்காத மேதை 1960*
*பாவை விளக்கு 1960*
*கப்பலோட்டிய தமிழன் 1961*
*தெய்வத்தின் தெய்வம் 1962*
*கைதியின் காதலி 1963*
*கைகொடுத்த தெய்வம் 1964*
*வழி பிறந்தது 1964*
*கௌரி கல்யாணம் 1966*
*திருமால் பெருமை 1968*
*குரு தட்சணை 1969*
*குறத்தி மகள் 1972*
*தாயகம் 1972*
*எங்கள் தாய் 1973*
*கவரிமான் 1979*
*வறுமையின் நிறம் சிவப்பு 1980*
*மலர்களே மலருங்கள் 1980*
*கனவுகள் கற்பனைகள் 1982*
*தூக்கு மேடை 1982*
*ஏழாவது மனிதன் 1982*
*வில்லியனூர் மாதா 1983*
*எத்தனை கோணம் எத்தனை பார்வை 1983*
*சிந்து பைரவி 1985*
*கண்ணே கனியமுதே 1986*
*இனி ஒரு சுதந்திரம் 1987*
*நீதிக்கு தண்டனை 1987*
*வேதம் புதிது 1989*
*புதிய தென்றல் 1993*
*மஹேஸ்வரி 1995*
*துள்ளாத மனமும் துள்ளும் 1999*
*பாரதி 2000*
*கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன் 2000*

*இன்னும் பல தமிழ் படங்கள் அவரது பாடல்களை பயன்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.*

*மனிதன் எளிதில் இன்புறுவது இரண்டு நிகழ்வுகளில்... ஒன்று விழிவழி காணும் காட்சியில் தனக்குப் பிடித்தமானவற்றில்*

மனதையும் எண்ணத்தையும் செயல்பட விடுகிறான். மற்றொன்று செவிக்கு இனிமையான வார்த்தைகளைக் கேட்டு இன்புறுகிறான். பாரதியாரின் பாடல்கள் இத்தகு இரண்டு செயல்பாடுகளையும் அவனுக்குள் நிலைநிறுத்தி விடுவதில் முன்நிற்கின்றன.

ஆனால் 2000 ஆண்டுக்குப் பிறகு வெளிவந்த தமிழ் திரைப்படங்களில் பாரதியாரின் பாடல்கள் வெகுவாக பயன்படுத்தப்படவில்லை. அவரது வீறுகொண்ட உணர்ச்சிமிக்க கருத்தாழமிக்க வரிகள் இன்றைய கதைக் களத்திற்கு போதுமானதாக அமையவில்லை என்று எடுத்துக் கொள்வதா? அல்லது இன்றைய சூழலில் இயக்குனர்கள் பாரதியின் பாடல்களை பயன்படுத்துவதை தவிர்க்கிறார்களா? என்பதை காலத்தின் சிந்தனைக்கு விட்டுவிடலாம்.

பாரதியாரின் பிறந்த நாளிற்காக...

—

இளையவன் சிவா

---

# வாகையைச் சூடிடுவாய் பாவகை: குள்ளத் தாரா

வஞ்சகரை நீக்கிடவே குள்ளத் தாரா - வாழ்வில்
வாகையினைச் சூடிடுவாய்க் குள்ளத் தாரா!

சொற்களையும் போற்றிடவே குள்ளத் தாரா - சொல்லும்
சொல்லினையும் காத்திடுவாய்க் குள்ளத் தாரா!

வாழ்கின்ற உயிர்களெல்லாம் குள்ளத் தாரா - மண்ணில்
வாழ்ந்திடுமே தகுதியினால் குள்ளத் தாரா!

02 - மேலோரிடத்தில் செருக்கு இல்லை
பா வகை: தில்லாலே சிந்து

வண்டுமொய்க்கும் மலரைச் சூடி-
தில்லாலங்கடி லேலம்!
பெண்ணவளும் வந்தாள் பாடி-
தில்லாலங்கடி லேலம்!

பொருளிருந்தும் மேலோர் நெஞ்சில் -
தில்லாலங்கடி லேலம்;
பொருண்மையெனும் வாழ்வைக்
காண்பாய் - தில்லாலங்கடி லேலம்!

செல்வமெலாம் சேர்த்தும் வாழ்வில் -
தில்லாலங்கடி லேலம்;
செல்வத்தால் செருக்கும் ஏதோ? -
தில்லாலங்கடி லேலம்!

*03 - உயர்ந்தோர் பிறர்குறை நீக்குவர் !*

*பா வகை: ஏலப் பாட்டு (சிந்து)*

*தன்னிடத்தில் நிலவென்றும் தற்பெருமை
நீக்கும்;
தன்னலமும் இல்லாமல்
தனித்தன்மை காக்கும்;
கன்னலென உயர்ந்தவர்கள் கனிவுடனாய்
வாழ்வும்
கன்னலென பிறர்வாழ்வை கனிவுடனே
காக்கும்;
துன்பமென வந்தோரை துணைநின்றுக்
காக்கும்
துன்பமெனும் இருளினையும்
துணிவுடனே போக்கும்;
நன்னெறியைக் காப்பவரை நானிலமும்
போற்றும்;
நன்னயத்தை கொண்டிடவே
நாடெல்லாம் காக்கும்;
தன்மனத்தால் உதவிடவே தன்னிறைவும்
நிலைக்கும்!
ஏலேலோ! ஐலசா ஏலேல ஏலேலலோ!*

—



வாழ்வியல் கவி,
*(சா. நாகூர் பிச்சை)*
*துபாய்.*

---

# அழகிய அன்றுடங்கள்!

*புவிமேல் படர்ந்திருக்கும்
இருளை கிழித்தெறிந்து
ஒளிக்கதிராலதை ஒட்டி
விழிக்கும் கண்களுக்கு
விருந்து வைக்கின்றன
அழகிய அன்றாடங்கள்!*

*முள்ளுடலின் நுனியில்
முளைத்திருக்கும் மொட்டினிதழ்களை
மெல்ல மெல்ல விரியவைத்து
காண்பவரின் முகங்களை
மலர வைக்கின்றன
அழகிய அன்றாடங்கள்!*

*குளிர்காற்றின் தீண்டலிலும்
குமரியின் விரல்களால்
முற்றத்தில் கோலமிடச்செய்து
விருந்தினரை வரவேற்கின்றன
அழகிய அன்றாடங்கள்!*

*ஏறிவரும் கதிரவனைக் கண்டதும்
உழவரின் உள்ளங்கைகளால்
ஏர்க்கலப்பையை ஏந்தச்செய்து
உழைப்புடன் தொடங்குகின்றன
அழகிய அன்றாடங்கள்!*

—

பாக்யபாரதி,
*தருமபுரி.*
*கைப்பேசி: 6382441306*

# விரட்டுவதும் கெஞ்சுவதுமான

தினசரிகளின்
இலக்குகள்
முடித்தவைகள்
மீதம் உள்ளவைகள்
நாளைய இலக்குகள்
மீதம் உள்ளவற்றையும்
நாளை சேர்ந்து முடிக்க
வேண்டியவைகள்
என விரட்டிக்கொண்டே
இருக்கும் மனமும்

கொஞ்ச நேரம்
என்னை விட்டு விடேன்
புத்துணர்ச்சியாக்கி
கொள்ள
எனக்கே எனக்கான
விரும்பவற்றுக்கு
செலவழித்து
கொள்கிறேன்
என கெஞ்சலாய்
புத்தியும

## ஆசையாய் ஆசையாய்..

தனித்திருக்கையில்
புத்தி
முன்னும் பின்னும்
வலதும் இடதுமாய்
சுற்றி
கடந்த போன
கஷ்டங்கள்
சந்தோஷங்கள்
நடந்து கொண்டிருக்கின்ற
நிகழ்வுகள்

நடக்க விருக்கின்ற
நிகழ்வுகள் பற்றிய
எதிர்ப்பார்ப்புகள்
பயங்கள் இன்றி

சிந்தனை இல்லாமால்
அமைதியாய்
உள் மனம் நோக்க
ஆசையாய் ஆசையாய்
இருக்கிறதே...

## அதற்கும்

உடல் நலமின்மையில்
மருத்துவரின்
என்ன பண்றது
சொல்லுங்கள்
என்பதற்கும்
சாருக்கு என்ன ஆச்சு
என்பதற்கும்

மனதின் கஷ்டத்தில்
முகவாட்டத்தில்
நமக்கானவர்களின்
என்னன்னு சொன்னா தானே தெரியும்
என்பதற்கும்
ஏம்பா இப்படி இருக்கே
என்பதற்கும்

தோல்வியில்
நமக்கானவர்கள்
உதிர்க்கும்
அடுத்த தடவையாவது

சரியாய் செய்
என்பதற்கும்
இது சின்ன சறுக்கல் தான்
அடுத்த முறை சரியாய்
விடும்
என்பதற்கும்

வெற்றி பகிர்தலில்
சரி அடுத்தது ஆரம்பி
என்பதற்கும்
உனக்கான
உழைப்பு, திறமைக்கும்
அங்கீகாரம்
என்பதற்கும்

உள்ள வித்தியாசம்
மனம் ஒட்டலும்
புரிந்து கொள்ளலும்

## ஒரு முறையேனும்...

பெற்ற பலனுக்கு
நன்றி கடனாய்
இல்லாமால்

எதிர்பார்த்திருக்கும்
சலுகைகளுக்கு
நேர் செய்ய நினக்காமால்

புண்ணியக்கணக்கில்
வரவாகும் என எண்ணாமால்

நான் இதை செய்தேன்
என உலக அறிவிப்பு செய்யாமால்

எந்த எதிர்பார்ப்பும் இன்றி
சக மனிதர்க்கு
ஒரு முறையேனும்
உதவினால்....

அப்புறம் என்ன?

மன நிறைவு கொடுத்து
தொடர் கதையாகி
வாழ்வு அர்த்தப்படும்...

## அப்ப...

சிறியவர்களை வெளியே
அழைத்துச்செல்கையில்
பார்ப்பது எல்லாம் கேட்ககூடாது

வரவுக்கு மீறிய செலவில்
என்னிடம் வரக்கூடாது

செய்பணியில் மிகப்பெரிய
தேக்கத்தில்
சிக்கலாகப்போகிறது
வேலை

தகுதிக்கு மீறிய ஆசையில்
ஏமாற்றம் கிடைக்கப்போகிறது
'இப்பவே சொல்லிட்டேன்'

## நீட்சி...

வாசிப்பின்
காட்சிகளின்
கேட்பின்
நீட்சி
'யோசிப்பு'

யோசிப்பின்
நீட்சி

'உணர்வுகள்'

உணர்வின்
நீட்சி
'எண்ணங்கள்'

எண்ணங்களின்
நீட்சி
'படைப்புக்கள்'

படைப்புகளின்
நீட்சி
'பிரசுரம்'

பிரசுரத்தின்
நீட்சி
'அங்கீகாரம்'

அங்கிகாரத்தின்
நீட்சி
'மீண்டும் படைப்புக்கள்'

## அப்பவும், இப்பவும்

அப்ப
பட்டிமன்ற தீர்ப்பில்
நாம் விரும்புகின்ற
தீர்ப்பு வருமா
என எதிர்பார்ப்பு

இப்ப
தீர்ப்பு தவிர்த்து
இரு தரப்பு வாதங்களை
உன்னித்தல்

அப்ப
செயலுக்கு முடிவு
சாதகமாகும் என்ற
ஒற்றை எண்ணம்

இப்ப
சாதகமாவில்லை எனில்
அடுத்தது பற்றிய
யோசனை
முடிவுக்கு முன்னே

அப்ப
நமக்கானவர்கள்
விருப்பமில்லாத
பேச்சுக்கும்
செயலுக்கும்
அதைப்பற்றியே
பேச்சு

இப்ப
அது ஒரு புறம்
இருக்கட்டும்
அதற்காக
உறவை, நட்பை
துறக்கலாமா
என்ற எண்ணம்

அப்ப
ஒரு வெற்றிக்கு
ஒரு அங்கீகாரத்துக்கு
அறிந்தவர்களிடத்தில் எல்லாம் சொல்லி
அலட்டம்

இப்ப
அலட்டல் இல்லாமல்
உள்ளுக்குள்ளேயே
உவகை

அப்ப
ஒரு தோல்விக்கு
ஒரு இழப்புக்கு
அறிந்தவர்களிடத்தில் எல்லாம் புலம்பல்

இப்ப
தனிமையிலே மட்டும்
வருத்தப்படுதல்

அப்ப
கடவுளிடத்து
எந்த சிக்கல் இல்லாத
வாழ்க்கையை
கொடு

இப்ப
சிக்கல்களும்
சவால்களும்
வந்தாலும்
அதை எதிர் கொள்ளும்
ஆற்றலை
என்னுடைய
உழைப்போடு
சேர்த்து வை
என பிரார்த்தனை

காரணங்களாய்
இடைப்பட்ட காலத்தில்
மேம்பட்ட யோசனை
செயல்திறன்
பெற்ற அனுபவம்
அனுபவத்தால்
கிடைத்த மனமுதிர்ச்சி

## அப்போது எல்லாம்...

நீண்ட நிதான
விளக்கங்கள்
கொடுத்த பின்னும்
புத்திக்கொண்டு
செல்லாத போது

உள் வாங்கினாலும்
தான் சரி என்று
முன் அனுமானம்
கொள்கையில்

தாம் சொல்ல நினைத்தது
எல்லாம் பகிரப்படுகையில்

பேசு பொருள் பற்றிய
விபரங்கள் தெரியாத
போது

உதிர்க்கும்
உதட்டு வார்த்தை
'சொல்வதற்கு ஏதுமில்லை

## புத்தியின் விளாசல்....

அது வேண்டும்
இது வேண்டும்
இப்போதே வேண்டும்
என்று குதித்து கொண்டே
இருக்காதே...

எனக்கும்
ஓய்வு தேவை
யோசிக்க நேரம்
வேண்டும்
என வார்த்தை விளாசல்
புத்தியிடமிருந்து

மனசுக்கு...

## அது நிகழ்ந்த பின்னே...

இப்படியாகுமோ
அப்படியாகுமோ
இது நடந்தால் நன்று
அது நடக்கக்கூடாது

சீக்கிரம்
நிகழக்கூடாதா
நிகழும் காலம்
நீண்டு கொண்டே
போவதால்

மனப்பதட்டமும்
உள்ளுக்குள்ளேயே
அழுத்தமும்
பகிர்ந்தால்
பரிகாசம்
பரிசாகும் என்ற
பயமும்
பிற பணிகளுக்கான
சிந்தனை மறுப்பும்

ஆனால்
நிகழ்ந்த பின்னே
அதுவும் சாதகமானால்
உள்ளே உள்ளது
அனைத்தும்
காணாமால் போய்
ஒரு அமைதி பரவும்
உணர்ந்துண்டா

என்ன ஒன்று
இதுமாதிரியானவைகள்
வந்து கொண்டே தான்
இருக்கும்
வாழ்க்கை பயணத்தில்...

## நீங்கள்

தவறான புரிதலுக்கு
கோபமோ
இடம் பெயருதலோ

விமர்சனத்தில்
அர்த்தமுடையதாயின்
ஏற்பதும்
இல்லையெனில்
மறுப்பதோ

பிடிக்காத பேச்சுக்கு
முகம் திருப்புதலோ
அலைபேசி பார்ப்பதோ

தகுதிக்கான பாராட்டுக்கு
நன்றியும்
இல்லாதவற்றுக்கு
மறுப்பும்

யோசனை சொல்லப்படுகையில்
சரியானவற்றுக்கு
எடுத்துக்கொள்கிறேன்
இல்லையெனில்
ஒத்துவராது எனவும்

என்னுடைய
எதிர்வினை
நீங்கள் கொடுத்த
வினைக்கு...

## அதற்கும் மேலே...

இந்த ஒரு

யோசிப்பு போதுமே
திறமை போதுமே
குணம் போதுமே
செயல் போதுமே
பேச்சு போதுமே

என்று சொல்லப்படுவை
எல்லாம்
காரியம் ஆகவும்

இல்லை
உள்ளத்திலிருந்தே
வந்தாலும்
நம்பிக்கை கொடுக்கவும்
பாராட்டவும்

அதற்கு மேலே
அதை புத்தி கொண்டு சென்றால்

அடுத்த கட்ட
நகர்வு
கேள்விக்குறி தான்

## உள்ளேயும் வெளியேயும்

பேசாதாவரின் உதட்டு
மொழியில் பேசிக்கொண்டிப்பவரின்
மௌனத்தில் மனதிலும்
வெளியேயும் ஏன்

## வேண்டாம்...

இயங்குதலே
நிறுத்த வேண்டாம்

இலக்குகளுக்காக
மட்டுமல்ல

நிறுத்தினால்
தேவையற்ற
ஒப்பீடு
பேச்சுகள்
பயங்கள்
குற்றம் காணல்
சலிப்பு
மிகை எதிர்ப்பார்ப்பு
நம்மோடு
கைகோர்த்து
கொள்ளுமே...

## வார்த்தை சிறகினில்...

உன்
திட்டமிடல் அபாரம்
செயல்பாடு சிறப்பு
உழைப்பு அற்புதம்
விடாமுயற்சி மிக நன்று

என்ற பாராட்டுகளின்
'வார்த்தை சிறகினில்'

தன்னிறைவு
நம்பிக்கை
சாதித்தற்கான சந்தோஷம்
மீண்டும் ஒரு முறை
இதே விட சிறப்பாய் செய்ய
உத்வேகம்
என மனம் பறக்கும்
வான் வெளியில்..

## முதன் முதலாய்...

ஆரம்ப பள்ளியின்
ஆரம்ப நாட்களில்
'வருகைப்பதிவேடு
ஆசிரியர் எடுக்க சென்றப்பொழுதினில்
வீட்டை நோக்கிய ஒடிய பொழுதுகள்

'புரியாத கேள்விக்கு
தவறான பதிலை
திரும்ப திரும்ப சொல்லி
திட்டு வாங்கி அவமானப்பட்ட
எட்டாம் வகுப்பு நாள்

பள்ளி ஆண்டு விழாவில்
முதன் முதலாய்
பரிசுக்காய் பெயர் அறிவிக்கப்பட்ட
போது
மனது ஆடிய ஆனந்த நர்த்தனம்
மேல் நிலை இறுதியாண்டில்

பயிற்சிக்காக
தயாராகாத பொருளில்
வகுப்பு எடுத்து பேராசிரியரிடம் பெற்ற
பாராட்டு தருணம்
பட்ட மேற்ப்படிப்பில்

வாழ்க்கையாய்
மாறப்போவதாய் நினத்த
பணிக்கான
பதற்றமடைய வைத்த
முதல் நேர்முக தேர்வு

பணிக்காக
முதல் முறையாய்
உயிரான குடும்பத்தையும்
உயிர் இல்லாவிட்டாலும்
உள்ளம் கொண்ட வீட்டையும்
பிரிந்த தருணம்

வசன கவிதை எழுத ஆரம்பித்த பொழுது
எப்படி விமர்சனம் இருக்குமோ என்ற
அச்ச உணர்ச்சி

இப்படி
'குட்டி குட்டியாய்
நினைவு அலைகள்...

## வார்த்தைகளை மாற்றி...

இதை
செய்யாதே

அதை
செய்

இந்த யோசிப்பு
தவறு

அப்படி
யோசி

இது தான்
சரியாய் வரும்

அது
சரிப்படாது

என்று ஒன்றையே
திரும்ப திரும்ப
சொல்லாமால்

எதனால்
செய்ய வேண்டும்

செய்யக்கூடாது
சரியாய் செய்தால்
என்ன கிடைக்கும்
இல்லை எனில்
என்ன ஆகும்

என காரணங்களையும்
விளைவுகளையும்
உதட்டு வார்த்தைகளாய்
மாற்றினால்

கேட்பவருக்கு
சலிப்பு மாறி

பேச்சை
உற்று நோக்கும்
சம்பவம் நிகழும்...

## அதனால்...

சொன்னதை
கேட்கல

விரும்பினதை
முடிக்கல

வேண்டாம்
சொன்னது
நடக்குது

காலக்கெடு
கணக்கில்
கொள்ளப்படவில்லை

ஏன் இப்படி
மனதின் கேள்விக்கு
புத்தியின் பதிலாய்

நீ
வேண்டும்
வேண்டாம்
என எண்ணிகொண்டு
மட்டும் இருக்கிறாய்

நானோ
நீ சொல்வதை
கேட்டு கொண்டும்
வரும் சவால்களை
எதிர் கொண்டும்
செயல் செய்து
கொண்டு இருப்பதால்

## அந்த கணத்தில்...

எதிர்பார்த்த
எதிர்பாராத
வெற்றியில்

கடினம் என
எண்ணியது
எளிமையாகுகையில்

பயந்த விடயங்கள்
நடக்காது போகையில்

கிடைக்காது
என சந்தேகப்பட்ட
உதவி கிடைக்கையில்

மனது
ஆனந்த ஆட்டம்
போடும் தான்

வானில்
பறிக்கும் தான்

எதுவும் முடியும்
என கர்வம்
கொள்ளும் தான்

அதை அடக்கி
ஆடியது போதும்

செய்ய வேண்டியது
நிறைய உள்ளது

அடுத்த கட்ட நகர்வு
நோக்கி பயணிப்போம்

என கூட்டிக்கொண்டு
போவது
புத்தியின் காரியம்

## எல்லா காலங்களிலும்...

பள்ளி காலங்களில்
உறவினர்
திருமணம் காட்டி
கூடுதலாய்
ஒரு நாள் விடுப்பு

கல்லூரி காலங்களில்
பிடித்த நடிகரின்
படம் பார்க்க
மதிய வகுப்புக்கு
மட்டம்

உறவின்
நட்பின்
திருமண நாளின்
முதல் நாளில்
நடுநிசியை தாண்டியும்
நெடிய பேச்சு

செய் தொழிலில்
நண்பர்கள் இணைவில்
வெளியே செல்கையில்
வழக்கமாய்
கொடுக்கும்
கூடுதல் உழைப்பு நேரத்திற்கு
விடுமுறை

இப்படி
எல்லா காலங்களிலும்
எப்போதாவாது
நடக்கும்
சந்தோஷ நிகழ்வுகள்
வாழ்வை
சுவராசியபடுத்திக் கொண்டு தான்
இருக்கிறது...

## என்ன தான்...

இல்லத்தில் இறையிடத்து
பிரார்த்தனை செய்து
செய்பணிக்கு கிளம்பினாலும்

பேரூந்து பயணத்தில்
பக்கத்து இருக்கைகார்
பேச்சாலோ
அலைபேசி பார்த்தலோ
வழக்கமாய்
எதிர்படுகின்ற
ஆலயத்தை நோக்கி
கன்னத்தில் போடுதலோ
மானசீக தரிசனமோ
தவற விட்டால்

பெரிய வருத்தம் தான

## அப்ப வாங்க...

பெரிய சவால்களும்
கடின இலக்கும்
குறுகியக்காலக்கெடுவும்
உடனடிச்செயல்பாடும்
அழுத்த பணிகளும்
வாழ்வின்
தவிர்க்க இயலாதவை தான்

ஆனால் நீங்கள்
இதைப்போன்றவற்றை
கடந்து சாதித்த பொழுதுகளுக்கு
அடுத்து வாருங்கள்

அப்ப வந்தால்
அது கொடுத்த
நிறைய நம்பிக்கை
எளிமையாய்
எதிர் கொள்வோம்
என
மனித மனங்களின்
குரல்
எல்லா நேரங்களிலும்
வாய்ப்பில்லை
என யதார்த்தம்
தெரிந்த போதிலும்

## ஒன்றா?

எதிர்பார்த்தது
நடக்க வேண்டும்

எதிர்பார்க்காதது
நடக்கக்கூடாது

வேண்டுவன
கிடைக்க வேண்டும்

வேண்டாதவை
நிகழக்கூடாது

விரும்புவது
கிடைக்க வேண்டும்

விருப்பம் இல்லாதது
வேண்டாம்

என முடிவுக்கான
காத்திருப்பு பொழுதுகளில்

பய பதட்ட
உணர்வுகளுக்கான
அளவீடுகளும்

முடிவுக்கு பின்னான

சாதகமானால்
வரும் நிம்மதியும்
சந்தோசமும்

பாதகமானால்
வரும் கவலைகளும்
வேதனையின்

அளவீடுகளும்
ஒன்றா
என்றால் இல்லை

முன்னதில்
அதிகம்
பின்னதில்
கொஞ்சம்

குறைவு தான்...

## யாருக்குத் தெரியும்?

சொல்ல வேண்டியதை
சொல்லி விட்டு
பதிலான உதட்டு
மொழிக்கு காத்திருப்பில்
அமைதி காணப்பட
அந்த கணத்தில்

சொல்வதற்கு
சம்மதமா
யோசிப்பா
வேறு யாரிடமாவது
விசாரிப்பா
பின்னர் தானா

என்ற எண்ணங்கள்

பதில் சொன்னாலே
புரிதல் தேவைப்படுகையில்

மௌனத்திற்குப்பின்னால்
உள்ளது யாருக்கு தெரியும்

சம்பந்தபட்டவர்
வாய் திறக்கும் வரை...

— *A.S.* சுந்தரராஜன்,
மானாமதுரை.



## ஓவியம்:
## மா. நிரல்யா,
இரண்டாம் வகுப்பு,
சிங்கப்பூர்.



# தாது மாமலர்

இரவு கூடலில் முயங்கி
பின் மயங்கி உறங்கி
அதிகாலை கண்விழித்து
கண்ணாடி பார்க்கையில்
உன் பிறைநுதல் திலகம்
அதுதான்
சிகப்பு வண்ண
ஒட்டுப்பொட்டு
என் மார்பின்
ரோம மஞ்சரியில்
ஒட்டிக் கிடந்தது

எனக்கு அது
வண்ணத்துப் பூச்சியின்
சிறகில் ஒட்டிக்கொண்ட
மகரந்த துகள்
காலைக் கதிரின் அகல்
பூரண நிலவின் நகல்

உனக்கோ அது
இரை தேடி இரவில் அலையும்
தேன் கரடியின்
உடம்பு உரோமத்தில்
ஒட்டிக்கொண்ட
பூனையின் காலடி போன்ற
இதழ்கள் கொண்ட
இலுப்பை பூ.

—

மு. ஆறுமுகவிக்னேஷ்,
சத்திரப்பட்டி - 626102

---

# சாலையோர விண்மீன்கள்

இருட்டத்தொடங்கியதும்
தனியாகவோ
மொத்தமாகவோ
வந்து படுக்கைவிரித்து
உறங்கத்தொடங்கி
அதிகாலையில் எழுந்துவிடுகின்றன
வான வீதியில்
நடைபாதை வாசிகளாய்
நட்சத்திரங்கள்!

## முதல் நிலை

பல கோடி ரூபாயில் பிரம்மாண்டமாக
கட்டப்பட்டு
கோலாகலமாக
திறப்புவிழா செய்யப்பட்ட
ஆற்றுப்பாலத்தை
முதல் மழைக்கே அடித்துக்கொண்டு
போனது வெள்ளம்
கல்வெட்டில் திறப்பாளர் மற்றும் முக்கிய
புள்ளிகளுக்கு
பெயருக்கு கீழே
கட்டியவர் பெயரோடு
எழுதப்பட்டு இருந்தது
முதல்நிலை ஒப்பந்தகாரர் என்று....

—

நேசன் மகதி

# செடிகளின் வளர்ச்சியில் பங்கெடுக்கும்

மண்ணும் நீரும் முட்டிக்கொண்டு
வேலைநிறுத்தம் செய்கின்றன வேரினைத்
தடுத்தபடி இறுகிப்போன மண்ணுக்குள்
நுனியின் ரத்தம்
வழிந்தோடித் தேடுகிறது உயிரை.
உறிஞ்ச வழியற்று
நீரைத் தேடும்
தண்டும் தூவியும் மெலிந்து புதைகிறது
வேருக்குள். இறுமாப்பின் பிடிக்குள்
விலங்கிட்டு
வனத்தை பாலையாக்கி ஆவியாகிக்
போயின
சூரியன் இருப்பதை மறந்து.

## காற்றின் விசை

தொலைத்து சிறகின் பயனிழந்து
பறத்தலின் வானத்தை மறந்து
எல்லையற்ற வெளி காணும் விழிகளை
ஒடுக்கி
புழு பூச்சி தேடாத அலகு கொண்டு
அடுக்கப்பட்ட அட்டைகளுக்குள்
அடுத்தவர் எதிர்காலத்தை ஒற்றை தானிய
அசைவிற்கேறப
அலசிப் போடுகிறது கூண்டுக்குள்
ஒளியும் கிளி.

## தார்ச்சாலையை மூடியும்

தரைத்தளத்தை மூடியும் தற்காலிக
ஏரியாகிப்போன அடுக்ககத்தின்
இரண்டாம் மாடியில் இருந்து இரண்டு
ஆண்டுகள் படிக்காத புத்தகத்திலிருந்து
உருவாக்கிய கப்பல்களை எறிந்து
விளையாடுகிறாள் தடைக்காலத்தில்
வீட்டில் இருக்கும் மகள்.

— இளையவன் சிவா,
கைபேசி: 9965359130



# வார்த்தைகளிட்டு

நிரப்பப்பட வேண்டிய
என் கவிதைகளுக்கு
உன் முத்தங்களே
போதுமானது.

## அந்தக் கூட்டத்தில்

என்னைத் தேடித் திரிகிறாய்.
உன் பார்வை வலையில்
விழாமல்; தரையில்
விழுந்த மீனாய்
துடித்துக் கொண்டிருக்கிறேன்
நான்.

## என் குதிரையைக் கேட்டு

வந்திருக்கிறாய்.
பலமுறை
என்னைக் கவிழ்த்திருக்கிறது.
நான் சொன்னால் தவிர

அது
உனக்குத் தெரிய
வாய்ப்பில்லை.
அவ்வளவு எளிதில்
யாருக்கும் அடங்காது
என் குதிரை.
நீ சாமர்த்தியசாலியாக
இருக்கலாம்.

என் குதிரை உன் கட்டுக்குள்
வர வேண்டுமெனில்
விழவும் எழவும்
பழகிக் கொள்ள வேண்டும்...!

## முதுகில் வியர்வை

முத்துக்கள் உடைய சுமந்த
அரிசி மூட்டையின்
அரிசியில் சற்று
உவர்ப்பிருக்கலாம்.

தலையிலிருந்து வடியும்
வியர்வை பின் கழுத்து
வழியே இறங்கியதில்
மூட்டையின் தையல்
பகுதிவரை
நனைந்திருக்கிறது.

கடைசி மூட்டையை
நான் சுமக்கும் தருணம்
முதல் மூட்டையின்
வியர்வை; அற்றுப் போய்
இருக்கலாம்.
இன்றைய பொழுதுக்கும்
பசிக்கும்; கிடைத்த கூலி
போதுமானது.

நாளை பருப்போ
சர்க்கரையோ அரிசியோ
காய்கறி மூட்டையோ
ஏதோ ஒன்றைச் சுமக்க
என் முதுகும் இருக்கும்
நானும் இருப்பேன்.

## படபடவென வருமளவுக்கு

அப்படியென்ன அவசரமோ
தெரியவில்லை?
குனிந்தபடி ஓடியதில்
என் பின்பாதி மட்டும்
நனைந்திருக்கிறது.
முழுதாய் நனைய என்னுள்
எண்ணம் எழும் முன்
மஞ்சள் வெயில் காயவும்
மான்குட்டி மேயவும்
அலுத்துப் பெய்திருக்கலாம்.

ஏனோ
பொசுக்கென்று அடங்கிற்று
நான்கு தூறலோடு மழை.

—

கவிதைகள் ஆக்கம்,
பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353.



# இதயம் கவனி

சோம்பேறிகளின் சொர்க்கம்
எது ஒன்றுக்கும் காரணம் தேடும்
எல்லாம் மாயை என்றால்
வங்கிக் கணக்கு எதற்கு
பொறாமை நெஞ்சத்தில்
றெக்கை முளைக்காது
காழ்ப்பு வஞ்சத்தில்
முத்தம் பிறக்காது
அந்தக்கல் இந்தக்கல் என
அடை காத்தால்
குட்டி போடும் மனவியாதி
புறம் பேசி உளறித் திரிந்தால்
உள்ளூர ஒரு சாத்தான்
தினம் தினம் வளர்வான்
சுகவாசிகளின் இருண்மைக்கு
எவ்வெளிச்சமும் போதாது
உழைக்க மறந்தவனுக்கு
உலக்கையும் சாமி
இறங்கி வேலை பார்ப்பவனுக்கே
இறைவனும் இதயம் தருவான்
நேரம் காலம் பார்த்து
நொந்து போவதை விட
நிதானமாய் நின் இதயம் கவனி
இசைக்கும் இவ்வாழ்வு

## வேடிக்கை கடவுள்

இத்தனை மெத்தனம்
இருந்திருக்க கூடாது
புத்தியில் அழுக்கு கூடியபோது
கண்டுக்காமல் விட்டது ஏனோ
உடலில் கொழுப்பு படர
அனுமதித்தது சரியா
நடைப்பயிற்சி உட்பட
எந்தப் பயிற்சியும் இன்றி
அலைபேசியில் மூழ்கி
கிடக்கையில்
தலையில் தட்டாமல் விட்டது ஏன்
போகும் இடமெல்லாம்
அவமானத்திற்கு
ஆட்படுத்தியது தவறு
அந்தச் சுமை இந்தச் சுமை என
ஏற்றி வைத்து
வேடிக்கை பார்த்து விட்டு
நெஞ்சைப் பிடித்து விழுந்த போது
இப்படித் தூக்கி போட்டு
ஆம்புலன்சில்
வேகமெடுத்துக் கொண்டிருப்பது
நியாயமா கடவுளே

## நகர்ந்து விட்டேன்

அது நிகழ்ந்திருக்க கூடாது
மற்ற வழியெல்லாம்
மறந்தாலும்
உற்ற வழியையும்
எப்படி மறந்தேன்
வெளி கலையட்டும்
உள்ளும் சிதற
யார் அனுமதித்தது
முன்பெப்போதும்
இப்படி இல்லை தான்
பின்பெப்போதும் இது
இப்படியே இருந்தால் எப்படி
நகர்ந்து விட்டேன் என்றும்
நம்பாத என்னை
பின் தொடர
விட்டு விட்டேன்
வந்து சேர்ந்து

நானாக
ஆகி விட்டதை
நம்பாமல் நம்பிக்
கொண்டிருக்கையில்
கேட்க தோன்றுகிறது
எது நிகழ்ந்திருக்க கூடாது

— கவிஜி

---

# வசீகரா...

உன் நாசிக்குள் சுவாசமாக சென்ற
காற்று வசியமாகிப் போய்
வரமாட்டேன் என்கிறது...

வம்படியாய் நீ பெருமூச்சு விட்டு
உன்னை
பிரியும் வேளையில்
பெயரிட்டு செல்கிறது
வசியக்காரன் என்று...!!!

பிரியா விடை தர மறுத்து
மீண்டும் மீண்டும்
வேகமாய் உன் கேசம் களைத்து
விளையாடி "வசீகரா'... என
வர்ணிக்கிறது

ஓசையாய் உருமாறி உன் செவிதனில்
ஊடுருவி
உன் சிந்தைக்குள் செல்லப்பார்த்து
தோற்றுப்போய் போடா... "செவிடா"
என கோபமும் கொள்கிறது

அதற்கு தெரியாது உன் ஆதி முதல்
அந்தம் வரை இருப்பது... "நானென்று"

காசா பணமா..?? காற்று தானே அதுவும்
உன்னை காதலிக்கட்டும்...!!!!

—

சூர்யகலா சரவணன்,
கண்டிதம்பேட்டை.



---



சிவ. தரணிஸ்ரீ,
நான்காம் அ பிரிவு,
தூய இதய மழலையர் தொடக்கப் பள்ளி,
தஞ்சாவூர்.

மேடையில்
பரிசு
வாங்கிய போது
ஞாபகத்திற்கு
வந்து உறுத்தியது
முந்தி
ஓடி வந்தவனை
கால் இடற
செய்து விட்டு
முன்னே ஓடி வந்து
வெற்றி பெற்றது!

## படுக்கையில்

உதிர்ந்து கிடக்கும்
ஒரு சில
மல்லிகை பூக்கள்!
எதையெதையோ
நினைக்கத் தூண்டுகிறது
வெளியூர்
சென்று வந்த
நாட்களில்!

## அதிகாலையிலேயே

எழ வேண்டும் என்று
நினைத்துக்கொண்டு
படுக்கின்ற
இரவின் தீர்மானம்
பின் அதிகாலையில்
இன்னும்
கொஞ்சம் நேரம்
தூங்குவது என
மாற்றியமைக்கப்படுகிறது
சோம்பேறிகளால்!

## சாராயமும்

ஊறுகாயும்
தோழமை
கொள்ளுமளவிற்கு
தோழர்கள் கூட
தோள் கொடுப்பதில்லை
காதலில் தோல்வி
கொண்டவர்களுக்கு!

## நீ துப்பட்டாவை

துறந்த நாளை
எப்படி உணர்ந்தாயோ
தெரியாது
எனக்குத் தான்
சங்கடமாக இருந்தது
உன் முன்னால்
நின்று பேச!

## கல்

சிற்பம் ஆனது
சிற்பியின் கைகளால்
உளி பட்டதும்!
சிற்பம்
தெய்வமானது
பூசாரியின் கைகளால்
பூ மாலையோடு
திருநீறு குங்குமம்
இட்டதும்!

## பக்கத்துத்தெரு

குடித்தனகாரர்கள்
பலர் சபரிமலைக்கு
மாலை அணிந்ததும்
மானசிகமாய்
நன்றி சொல்கின்றன
சில கோழிகளும்

ஆடுகளும்!

### ஏரிகள்

திறந்ததில்
பெருமகிழ்ச்சி
கொண்டன
அடைப்பட்டுக்கிடந்த
மீன்கள்!
அச்சம் கொண்டனர்
வெளியில்
வாழும் மக்கள்!

### மனங்களைக்

கொன்று
குவிக்கிறார்கள்
ம(னித)ன விரோதிகள்
தினம் பல
வசவுகளால்!

### நீதி நேர்மை நாணயம்

இப்போது
உறுமாறியிருக்கிறது
சாதி மதம் பணம்
என!

— மகிழை சிவகார்த்தி



---

# அழகே அழகு

அழகைப் பற்றி நண்பரோடு பேசுகையில் ஒரு விடயம் புலப்பட்டது.

வெளிப்புறத் தோற்றத்தை வைத்து நாம் ஒருவரை நம்மோடு சேர்த்துக் கொள்வதில் அதாவது அவர்களை விரும்புவது... நேசிப்பது... அது காதலாக இருக்கலாம். நட்பாக இருக்கலாம்... எந்த உறவாக வேண்டுமானாலும் இருக்கலாம்... அது... சரியல்ல என்பது தான் வாதம்.

ஒப்புக்கொள்ளலாம்.

ஆனால்... உண்மை அதற்கு எதிர்மறையாக இருக்கிறது.

நாம் ஒருவரை முதலில் வெளித் தோற்றத்தை வைத்தே தேர்ந்தெடுக்கிறோம் என்பது தான் கசக்கும் உண்மையாக இருக்கிறது. பிறகே அகத்தோற்றம் தெரிய வருகிறது. அகத் தோற்றத்தை கொண்டு தான் எந்த உறவையும் அணுகவோ தேர்ந்தெடுக்கவோ வேண்டும் என்று உறுதியாக நம்பும் ஆட்கள் கூட நான் சொன்ன புறத்தோற்றத்தின் வழியாகவே... அவர்களுக்கே தெரியாமல் அதை நிகழ்த்துகிறார்கள்.

இன்னும் விளக்கமாக சொன்னால்...
அவர்கள் அப்படி
நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

உண்மை என்னவெனில்.. இதுவரை நாம் அழகென்று எதையெல்லாம் நம்புகிறோமோ... நம்ப வைக்கப்பட்டிருக்கிறோமோ... அது வடிவம்.. லட்சணம்... நிறம்... பளீர் தன்மை... இப்படி உள்ளே சென்ற அதன் கட்டமைப்பு நம்மை மீறி நம்மில் செயல்படுகிறது. அது தான் நமக்கான மனிதர்களைக் கண்டெடுக்கிறது. ஆகவே தான்... நாம் எத்தகைய வடிவத்தில் இருக்கிறோமோ அதற்கு கொஞ்சம் கூடுதல் குறைவாகவே நமது அந்த உறவுகள் இருப்பார்கள். கவனித்து பாருங்கள். (விதிவிலக்குகள் உண்டு)

ஒருவரை மிக அழகாக இருக்காங்க.. செம்மையா இருக்காங்க என்று அணுகுவது தவறென்று ஆகாது. அந்த சூப்பரும் செம்மையும் ஏற்கனவே நம்மில் நம் ரேஞ்சுக்கு உட்பட்டு பதியப்பட்டிருக்கிறது. அதன் தோற்றத்தை வெளியே பார்க்க.. இது நமக்கான ஆள்... என்று உணரப்படுகிறோம். அவரவருக்கு அவரவர் செம்மை அவரவரிடம் இருக்கும் என்பது தனக்கான ஆளை... தான் இதுவரை கண்ட முகங்களின் அணிவகுப்பில் இருந்து... பொருத்தி பார்த்த மாய நிகழ்த்துகளில் இருந்து... நீ தான் அது என கை காட்டுகிறது. ஓடி வந்து ஒட்டிக் கொள்கிறோம்.

புறத்தோற்றம் சரி இல்லை என்று ஒருவர் விலக்கப்படவும் வாய்ப்பிருக்கிறது என்று நம்புவது இயல்பு. ஆனால் அப்படி ஒன்று நடப்பதே இல்லை. சரியான ஆள் சரியான ஆளின் தோற்றத்தில் இணங்குவான். பார்க்கும் கண்களுக்கு தான் அழகு அழகில்லையே தவிர சம்பந்தப்பட்ட ஆள் எப்போதும் அழகு தான். சரியான கண்கள் கண்டுணரும்.

வெள்ளைத்தோல் கருப்புத்தோல் என்று உடல்நிறத்தை அல்ல பேசிக் கொண்டிருப்பது.

நான் அழகென்று நம்பியே ஒருவரை தேர்ந்தெடுக்கிறேன் என்று சொல்வதில் தவறு கண்டு பிடிக்க முடியாது. காரணம் அந்த அழகென்று நம்பிக் கொண்டிருப்பது என் புத்தியில் அதற்கான அர்த்தம் என் அளவுக்கு பதியப்பட்டிருக்கிறது. அதனால் தான் லைலாவின் அழகை மஜுனு கண்களால் பார்க்க வேண்டும் என்று சொன்னார்கள். ஒருவருக்கு அழகாய் தெரியும் ஒன்று இன்னொருவருக்கு மொக்கையாக தெரியலாம். ஆக... நான் அழகான ஆட்களையே தேர்ந்தெடுக்கிறேன். தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறேன். ஏனெனில் எனக்கு மொக்கை என்று ஒன்று இல்லவே இல்லை. மேலும் அழகு முகத்தில் இல்லை அகத்தில் இருக்கிறது என்பது முற்றிலும் உண்மை. ஆனால் அந்த முகமும் பார்க்கும் கண்களுக்கு அழகாய் தெரிவதில் தவறொன்றும் இல்லை.

எல்லாவற்றுக்கும் மேல் வெளிப்புறத் தோற்றம் மிக முக்கியமானது. ஆடை பாதி ஆள் பாதி... போல அதீத ஒப்பனை தான் ஒவ்வாமை. ஆளுக்கு தகுந்த ஒப்பனை அவசியம். இருக்கும் முகத்தில் இன்னும் கொஞ்சம் இளமை பூசிக்க கசக்குமா என்ன. மற்ற முகம் கவனிக்க இருந்தாலும்.. வெளி முகம் பளிச்சென்று இருந்தால் தான் அக முகமும் ஆகா சொல்லும். அகத்தின் அழகு முகத்தில் தெரிவது போல முகத்தின் அழகும் அகத்தில் தெரியும். ரெண்டையும்.. சமநிலையில் கொள்வது அவசியம்.

காதல் புனிதமானது.. காமமா அய்யயோ என்பார்கள். லேயரை பிரித்து பிரித்து பார்த்தால்... காதல் என்று ஒன்று இல்லவே இல்லை. எல்லாமே காமம் தான் என்ற அறிவியல் உண்மை பயங்கரமாய் பிளிறும். நாகரீக மனிதன்... பொதுவெளி நாகரீகம் கருதி... காமத்தை காதல் என்று சொல்லாடல் செய்து கொண்டான். காதலை புனிதப்படுத்தியவர்களின் கண்களில் காமம் கர்ணகொடூரமாக தெரியலாம். ஆனால் அவர்களின் இறுதி இலக்கும் காமமாகவே இருக்கும்.

அப்படி... தோற்றப் பொலிவு தான் ஈர்க்கும். அந்த தோற்றப் பொலிவு... இதயத்தில் இசை இருந்தால் தான் அரங்கேறும். அப்படி என்றால் அந்த இதயத்தை நெருங்க முடிந்தவனால் தான்... அந்த முகத்தை அழகென்று நம்பியிருக்க முடியும்.

(முகநூல் உள்பெட்டியில் ராத்திரியில் வரும் நீ செம்ம அழகுல்லாம் இதில் சேர்த்தி அல்ல) (என்ன செஞ்சு தொலைய... வேற வழி இல்லை என அழகுன்னு சொல்வதும் இதில் சேர்த்தி அல்ல.)

அழகு என்றாலே அய்யயோ என்ற அரூப துள்ளலுக்கு அவசியமே இல்லை. அழகென்று கர்வம் தான் கொள்ள கூடாது. வெட்கம் பூக்கலாம். ஒரு நண்பர் தன்னை அழகாக இருக்கிறாய் என்று சொல்வதில் என்ன தவறு இருக்க முடியும். அது ஒரு வகை பாராட்டு தானே. அதற்கும் அதீத எதிர்வினை ஆற்றுகிறோம் என்றால்... உயர்வு மனப்பான்மையில் இருப்பதாகவே அர்த்தம்.

ஐஸ்வர்யாவுக்கு மட்டுமே அழகு பாத்தியம் போட்டு தரவில்லை. அது ஓர் அழகு. பக்கத்து வீட்டு அருக்காணி ஓர் அழகு. அவ்வளவு தான். எப்படி இருந்தாலும் அழகான முகங்களையே ரசிக்கும் மனம் என்பதில் தவறுதலாய் புரிந்து கொள்ள வாய்ப்பு இருக்கிறது. அதை விளக்கத்தான் இத்தனை வரியும்.

என் உடல் அழகை பார்த்து தான் என்னை புடிச்சுதா... என் ஆன்ம அழகை இல்லையா என்று கேட்டால்... ஆன்ம அழகு அழகாய் இருப்பதால் தான் உடல் அழகு அழகாய் தெரிகிறது என்ற உண்மையைத் தான் சுற்றி சுற்றி பேசிக் கொண்டிருக்கிறேன்.
ஐயோ அசடு என்று ஒருவரால்

சொல்லப்பட்ட ஒருவரை இன்னொருவர் ஆஹா அழகு என்று சொல்லக்கூடும். ஆக அசடு என்று ஒன்று இல்லை. எல்லாமே அழகு தான்.

நீ அழகாய் இருப்பதால் தான் உன்னை பிடித்தது.

இந்த வாக்கியத்தில் அழகுக்கு வெள்ளை நிறத்தையும்... கவர்ச்சி கண்களையும் மட்டும் பொருத்திக் கொண்டால் நிர்வாகம் பொறுப்பல்ல.

இந்த அழகுக்குள் உன் அமைதி இருக்கிறது. இந்த அழகுக்குள் உன் ஆற்றல் இருக்கிறது. இந்த அழகுக்குள் உன் தெளிவு இருக்கிறது. இந்த அழகுக்குள் உன் சிந்தனை இருக்கிறது. இந்த அழகுக்குள் உன் தேடல் இருக்கிறது. இந்த அழகுக்குள் உன் பேரன்பு இருக்கிறது. இந்த அழகுக்குள் உன் ஞானம் இருக்கிறது. இந்த அழகுக்குள் உன் சில அறியாமையும் இருக்கிறது. ஆக.. அழகாய் இருப்பதால் தான் உன்னோடு பேசுகிறேன்... பழகுகிறேன் என்று சொல்வதில் கொலைக் குற்றம் கண்டுபிடிக்க முடியாது.

அழகே அழகு தேவதை
ஆயிரம் பாவலர் எழுதும் காவியம்
அழகே அழகு தேவதை
கூந்தல் வண்ணம் மேகம் போல
குளிர்ந்து நின்றது
கொஞ்சுகின்ற செவிகள் இரண்டும்
கேள்வி ஆனது
பொன்முகம் தாமரை
பூக்களே கண்களோ
மன கண்கள் சொல்லும்
பொன்னோவியம்
அழகே அழகு தேவதை.

—

கவிஜி

---

# பேரிடரை தடுக்க மின் சிக்கனம்

ஆண்டுதோறும் தேசிய அளவில் மின் சிக்கன தினம் டிசம்பர் 14-ம் தேதியும், மின் சிக்கன வாரம் டிசம்பர் 14-ல் தொடங்கி டிசம்பர் 20-ம் தேதி வரையும் அனுசரிக்கப்படுகின்றன.

தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் சார்பில் மின் சிக்கன வாரம் ஆண்டுதோறும். டிசம்பர் 14 ஆம் தேதி முதல் ஒரு வாரம் கடைபிடிக்கப்படுகிறது. இதன் நோக்கம் மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்த ஒவ்வொருவரும் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதே ஆகும்.

மனிதனின் வாழ்க்கையில் ஒவ்வொரு நொடியும் மின்சாரம், சமையல் எரிவாயு,

மண்ணெண்ணெய், பெட்ரோல், டீசல் உள்ளிட்ட எரிசக்தி ஆதாரங்களை மையமாக கொண்டே நகர்கிறது. அதில் மின்சாரம் மிக அவசியமாக ஏதேனும் ஒரு வடிவில் நமது அன்றாட வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்திருக்கிறது. அதில் மின்சார பயன்பாடு அனைத்திலும் மேலோங்கி நிற்கிறது.

ஒரு நிமிடம் மின்சாரம் நின்றாலும் நம்மால் பொறுத்துகொள்ள முடிவதில்லை.காரணம் அதன் அவசியமும் அதற்கு சரியான மாற்று இதுவரை இல்லை என்பதுமே காரணம். எனவே மின்சாரத்தின் அவசியத்தை உணர்ந்து அதனை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். அப்போதுதான் மின் கட்டணம் குறையும்.சுற்றுச்சூழல் மாசு குறையும்.

## மின் சிக்கனம் ஏன்?

மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்தினால் முதலில் நுகர்வோருக்கு மின் கட்டணம் கணிசமாக குறையும், அரசு அவர்களுக்காக மின் வாரியத்திற்கு வழங்கும் மானியம் குறையும், மேலும் மின் வாரியத்தின் இழப்பு குறையும். தேவையானவர்களுக்கு கூடுதலாக மின் உற்பத்தி செய்யாமலே மின்சாரம் கொடுக்க முடியும். மின்சார பயன்பாட்டை குறைப்பதின் மூலம் மின்சார உற்பத்தி குறையும், நிலக்கரி செலவு மிச்சமாகும். அந்நிய செலவாணி மிச்சமாகும். மின் சிக்கனத்தால் மின்சார பயன்பாடு மற்றும் மின் உற்பத்தி குறையும் பட்சத்தில் காற்றில் கலக்கும் பசுமை இல்ல வாயுக்களின் அளவு குறிப்பாக கார்பன் அளவு குறைந்து பூமி வெப்பமயமாவது குறையும்.

பூமியின் சுற்றுச் சூழல் பாதிப்பிற்கும், பூமி வெப்பமயமாதலுக்கும் முக்கிய காரணம் எரிசக்தி பயன்பாடு, மின் உற்பத்தி மற்றும் அதன் பயன்பாடு ஆகியனவாகும். அதிலும் மின்சார உற்பத்தியும் அதன் பயன்பாடும் காற்றில் பசுமை இல்ல வாயுக்கள் எனப்படும் கார்பன் டை ஆக்சைடு, மீத்தேன் போன்றவற்றை 60 சதவிகிதம் கலக்க காரணமாகும். எனவே பருவ நிலை மாற்றத்தை தடுக்க, பேரிடர்களை தடுக்க, சுற்றுச் சூழலை காக்க மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். மேலும் 1 யூனிட் மின்சாரம் சேமித்தால், அது 2 யூனிட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்குச் சமமாகும். அதனால் மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்.

## வீடுகளில் மின்சார சேமிப்பு...

ஐ.எஸ்.ஐ. முத்திரை கொண்ட மின் சாதனங்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.அவைதான் கூடுதல் மின் விரயத்தை தடுக்கும், மேலும் பாதுகாப்பாகவும் இருக்கும்.

தேவையில்லாத நேரத்தில் மற்றும் யாருமில்லாத அறைகளில் மின்

விளக்குகளை மின் விசிறிகளை நிறுத்த வேண்டும். சாதாரண குண்டு விளக்குகளுக்கு பதில் முடிந்தவரை எல்.இ.டி. விளக்குகளை பயன்படுத்த வேண்டும். அவை குறைந்த அளவு மின்சாரத்தை எடுத்துகொண்டு அதிக அளவு ஒளியை கொடுக்கும். உதாரணமாக 60 வாட்ஸ் குண்டு விளக்கு தரும் வெளிச்சத்தை 8 வாட்ஸ் எல்.இ.டி.விளக்கு தரும்.அதனால் ஏழு மடங்கு மின்சாரம் மிச்சமாகும். மேலும் நீண்ட காலம் உழைக்கும் எனவே, பணமும் சேமிக்கப்படும்.

மின் விளக்குகள் மற்றும் மின் சாதனங்களை அடிக்கடி துடையுங்கள். மின் விசிறியின் பேரிங்குகளுக்கு அடிக்கடி ஆயில் போடுங்கள். பழைய டியூப்லைட்களை மாற்றி புதிய எல்இடி டியூப் லைட்களை பயன்படுத்த வேண்டும்.

மின் விசிறிகளில் எலெக்ட்ரானிக் ரெகுலேட்டர்களை உபயோகித்தால் மின்சாரம் மிச்சமாகும்.

பிரிட்ஜை அடிக்கடி திறந்து மூடுவதால் தொடர்ந்து கம்பிரசர் இயங்கி மின்சாரம் செலவாகும்.எனவே பிரிட்ஜை அடிக்கடி திறக்கக்கூடாது. மேலும் சுவற்றிலிருந்து 1 அடி தள்ளி வைக்க வேண்டும்.

துணி துவைக்கும் இயந்திரத்தை நாள்தோறும் இயக்காமல் துணிகளை சேர்த்து வைத்து அதன் முழு திறனில் இயக்க வேண்டும். மேலும் அதில் உள்ள உலர் கருவியை பயன்படுத்துவது தவிர்க்கப்பட வேண்டும்.

தினமும் ஒன்றிரண்டு துணிகளை அயர்ன் செய்வதைத் தவிர்த்து மொத்தமாக அயர்ன் செய்வதால் மின் விரயம் தவிர்க்கப்படும்.

கிரைண்டர் பெல்ட்டுகள் அடிக்கடி தொய்வாகாமல் பராமரிக்க வேண்டும். நைலான் பெல்டுகள் சிறந்தது.

தொலைக்காட்சி, கணினி மற்றும் மின் சாதனங்களை ரிமோட் மூலம் ஆஃப் செய்யாமல், முழுவதும் அனைத்து விட வேண்டும். குளிர்சாதனப் பெட்டியை 22 டிகிரிக்கும் கீழே இயக்ககூடாது.

சாதாரண நைக்ரோம் கம்பியிலான ஹீட்டிங் எலிமன்ட் உள்ள மின்சார அடுப்பு, மின்சார குக்கர் அதிக மின்சாரத்தை செலவு செய்யக்கூடியவை. அதற்கு பதிலாக, இன்டக்ஷன் அடுப்பு பயன்படுத்தலாம். செல் சார்ஜர்களை எப்போதும் மின் இணைப்பில் வைக்கக் கூடாது.

வீட்டை கட்டும் போது சூரிய வெளிச்சம் வீட்டிற்குள் வரும் வகையிலும், மேலும் காற்றோட்டமாகவும் கட்டினால் மின்சாரம் பயன்படுத்துவது குறையும்.

வணிகர்கள் தேவையின்றி ஆடம்பர விளக்குகள் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். எல்.இ.டி. விளக்குகளை பயன்படுத்தினால் மின் கட்டணம் குறையும்.

தொழிற்சாலைகளில் சரியான திறன் கொண்ட நட்சத்திர குறியீடு உள்ள மின் மோட்டார்களை பயன்படுத்தினால் மின் நுகர்வு குறையும், மேலும் மின் தேக்கிகளை பயன்படுத்த வேண்டும்.

விவசாயிகள் அதிக திறனுள்ள நட்சத்திர குறியீடு உள்ள மோட்டார்களை பயன் படுத்த வேண்டும். ரீவைண்ட் செய்த மோட்டார்கள் அதிக மின்சாரத்தை செலவு செய்யும், மேலும் மின் தேக்கிகளை பயன் படுத்த வேண்டும்.

எனவே பொதுமக்கள் அனைவரும் மின்சாரத்தை சிக்கனமாகவும் பாதுகாப்பாகவும் பயன்படுத்தி பேரிடர்களை தவிர்க்க முன் வர வேண்டும்.

—

முனைவர். சா. சம்பத்,
தேசிய பயிற்சியாளர்,
மன்னார்குடி.



# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு – ஒட்டகச்சிவிங்கி பொம்மை நூல் வெளியீடு




தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு ஏறாவூர் அஹமட் பரீட் நூலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஏறாவூர் ஆதார வைத்தியசாலை வைத்திய அதிகாரி, கவிதாயினி மருத்துவர் திருமதி ஜலீலா முஸம்மில் அவர்கள் எழுதிய "ஒட்டகச்சிவிங்கி பொம்மை" மழலைப் பாடல் நூலின் வெளியீட்டு விழா கடந்த 19/11/2025 புதன் கிழமை காலை 10.00 மணிக்கு அஹமட் பரீட் நூலக பொறுப்பாளர் பி.என்.எப் றிஸாதா அவர்களின் தலைமையில் நூலக வளாகத்தில் இடம் பெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக ஏறாவூர் நகரசபை கௌரவ தவிசாளர் அல்ஹாஜ் எம்.எஸ். நழீம் அவர்களும், கௌரவ அதிதிகளாக ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் எஸ்.எச். முஸம்மில்,

நகரசபை பிரதி தவிசாளர் ஞா. கஜேந்திரன், கௌரவ உறுப்பினர் என்.எம். சரீனா, சனசமூக உத்தியோகத்தர் ஏ. ஹாறூன், ஆசிரியை என்.எம் ஆரிபா, நூலகர் திருமதி ஹப்சா மஜீத், நூலக விடய உத்தியோகத்தர் ஏ.ஆர். சஞ்சீதா, கலாசார உத்தியோகத்தர் எம்.எம். மக்பூல், நூலக உத்தியோகத்தர்கள், கவிஞர்கள் மற்றும் டாக்டர் ஜலீலா முஸம்மில் அவர்களின் குடும்பத்தினர் என பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வினை கவிஞர் எஸ்.எம். அமீன் அவர்கள் தொகுத்து வழங்கினார்.

டாக்டர் ஜலீலா முஸம்மில் அவர்கள் இதுவரை "சிறகு முளைத்த மீன்", தூரிகை வரையும் மின்மினிகள், மற்றும் மஞ்சள் மாம்பூ என இரு குறுங்கவிதை கவிதை நூல்கள் ஆகியவற்றை வெளியிட்டு, தமது நான்காவது படைப்பாக "ஒட்டகச்சிவிங்கி பொம்மை" எனும் மழலைப்பாடல் நூலை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைவதோடு , இவர் வைத்தியத் துறையை தாண்டி தமது படைப்பாற்றல் மற்றும் எழுத்துத் திறனின் மூலம் ஓய்வு நேரங்களை சிறப்பாக பயன்படுத்தி இவ்வாறான படைப்புகளை உருவாக்குவது எமது ஊருக்கு பெருமை சேர்க்கும் விடயமாகும் என கௌரவ தவிசாளர் அல்ஹாஜ் எம்.எஸ். நழீம் அவர்கள் தனது உரையில் பாராட்டுத் தெரிவித்தார்.

அத்தோடு, வருகை தந்த அதிதிகளுக்கு டாக்டர் ஜலீலா முஸம்மில் அவர்கள் "ஒட்டகச்சிவிங்கி பொம்மை" நூலை வழங்கியதோடு, பாடசாலை மாணவர்களால் அதிதிகளுக்காக அழகிய கலைநிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டன.










# இசை கவிதை

தேன் குடித்த வண்டு போல்
தேகம் எங்கும் சிரித்தது
காற்றென்னும் ஊடகமே
காதில் வந்து சேர்த்திடுமே

ஒளியின் சமிக்கை இசையாகும்
ஓடிவரும் சத்தம் நிறையாகும்
நாவில் சுவைக்க முடியாது
நாசிக்கு முகரவும் வராது

தோலினைத் தொடுவதும் கிடையாது
தோன்றும் ஒளியில் காணாது
மரக்கிளை அசைவில் நின்றே நீ
மணிகளின் ஒலியில் கேட்கின்றாய்

கடல் உமிழ் நீரில் கலக்கின்றாய்
கலக்கும் பறவைப் பாட்டில் பதிகின்றாய்
மலரிடம் வண்டினம் தரும் சமிக்கை
மாரிப் பொழியினும் இசை இடுகை

மிதக்கும் நீரில் நுணலின் இசை
மூழ்கும் குடத்தில் குமிழின் இசை
தந்தையின் குரலில் மொழியின் இசை
தாயின் வருடலில் வரும் மெல்லிசை

மழலையர் மொழிகளில் தேன் இசை
மலை அருவியின் சிதறலில் இன்னிசை
வான் இடியின் வழியில் வன்னிசை
வகையில் பல பல ராக இசை


மற்றவர் வெற்றியின் மகிழ் இசை
மகிழும் சிரிப்பில் நிறைய இசை
பறவைகள் பண்ணில் மறை இசை
பாரினில் உயிர்களின் வாழ் இசை

இசையே உன்னில் உயிர் அடக்கம்
இனிமைத் தேனில் வரும் உறக்கம்
ஒலிகளின் தோற்றமே இசையாக இங்கு
போதும் மொழியில் பயின்றிடுவோம்.

— ஹேமா லதா

---

# மழையுதிர மலருதிர



இலையுதிர
இறகுதிர

அலையுதிர
நிலவுதிர

இரவுதிர
பகலுதிர

கலியுதிர
வலியுதிர

கனவுதிர
கணமுதிர....

உன்
நினைவுகளுக்கு மட்டும்
ஏனிந்த அடம்!!

## தின்று தின்று

வளர்ந்திருக்கிறது
என்றாலும்,
தீராத பசிதான்

இன்னும் இன்னும்...

அன்பெனும் அன்னம்
கொண்டு வா
என்னிதயத்திற்கு!

கோபித்துக்கொண்டு
கண் காணா தூரம் போய் விட
எண்ணினாலும்
கணத்தில் அதைக்கைவிட்டு
உன்
கன்னமுரசுகிறது
இந்தக்காதல்!!

பார்த்து பிரிவதை விட
பிரிவதை செவித்துக்கொள்வதில்
கொஞ்சம் பரவாயில்லை,
பிரிதலின் வலி!!

எனக்கு நீ
உனக்கு நான்
காப்பாற்றிக்கொள்ளவென்று
நம்பியிருந்தோம்
அது நடக்கவில்லை
ஆயினும்
இறுதிவரை
நம்மைக் காப்பாற்றி
கரை சேர்த்திருந்தது
காதல்!!

காலம் காயமாற்றவில்லை...
காதல்தான் காயமாற்றியது,
கைவிட்ட பின்னும்!

— Dr. ஜலீலா முஸம்மில்,
ஏறாவூர்,
இலங்கை.

---

## இருளை குறை சொல்லாதீர்கள்

இருள் தான்
அனைத்துப் பொருட்களுக்கும்
கருப்பு நிறத்தைக்
கொடுத்தாலும்
சமத்துவமாய் கொடுக்கிறது...

நல்லவேளை
ஏதோ ஒரு காரணத்தினால்
என்னை
நீ
நிராகரித்து விட்டாய்
இல்லையேல்
எனக்கும் ஒரு
அடையாளம் கிடைக்காமலேயே
போயிருக்கும்...

வெள்ளைக் கொக்குகளின்
வலசையை
அதுவே தீர்மானித்தாலும்
அதன்
நடைப் பயிற்சியை
பசு மாடுகளே
தீர்மானிக்கிறது...

## பேருந்துகளில்

பத்து ஊக்குகள்
பத்து ரூபாய்க்கு விற்பதும்...
ஆறு கைக்குட்டைகள்
நூறு ரூபாய்க்கு விற்பதும்...
பல வண்ணங்கள் தீட்டட
பொம்மை பட நோட்டுகள்
விற்பதும்.
அதிக விலையேற்றம் என்று
வாங்காமல் விட்டு விடாதீர்கள்
யாசிப்பது க்கு பதில்
உழைக்க விரும்பும்
உள்ளங்கள் தான் அது...

- இரா. மதிராஜ், டிஎம்இ, எம்பிஏ,
புதிய எண் 3/79,
அலப்பபட்சாக் கவுண்டன் புதூர்,
காடையூர் அஞ்சல்,
காங்கேயம் - 638701.
திருப்பூர் மாவட்டம்.
அலைப்பேசி எண்: 9788475722



---

## பரபரப்பான சாலை

வாகனங்களின் சத்தத்தில்
மனிதர்கள் பயணிக்கிறார்கள்

சிலர் வாகனத்தில்
சிலர் கால்நடையாக

கம்பனும்
வள்ளுவனும்
பாரதியும்
பாரதிதாசனும்
மு வரதராசனும்

சேக்சுபியரும்
செல்லியும்
செகாவும் என
எல்லோரும்
தெருவோரத்தில்



ஒன்றாக ஓரிடத்தில்
இருக்கிறார்கள்

கூட்ட நெரிசல் ஏற்பட்டு
எல்லோரையும்
விலக்கி அனுப்புகிறார்

ஒரு கொசு கடித்ததில்
பஞ்சாய் பறந்தது
கூட்டம்

சிறிது உறக்கத்திலிருந்து
அலறி எழுந்தார்
பழைய புத்தகக் கடை வியாபாரி

— சா.கா. பாரதி ராஜா,
பிளாட் எண் 1, ஹரிஹரன் நகர்,
வசந்தம் நகர் (உட்புறம்), திம்மாவரம்,
செங்கல்பட்டு - 603101.
பேச - 9944315732

# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.